வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4904 /ஆ1/2024 நாள். 03.12.2024

பொருள் : வேலூர் மாவட்டம் – பெஞ்சல் புயல் – பாதிக்கப்பட்ட பள்ளிகளில் சீரமைப்பு மற்றும் மாணவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் – பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து

................

1. வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் பெஞ்சல் புயல் காரணமாக வகுப்பறைகள், ஆய்வகம் ஆகிய கட்டிடங்களில் நீர் தேக்கம் இருப்பின் உடனடியாக அகற்றப்பட்டு பாதுகாப்பான வகுப்பறை கட்டிங்களில், விஷப்பூச்சிகள் இல்லாததை உறுதி செய்த பின்னரே மாணவர்களை வகுப்பறைக்குள் அனுமதிக்கப்பட வேண்டும்.
2. மின்கம்பிகள் அறுந்த நிலையில் மற்றும் சுவிட்சுகள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பின் உடனடியாக மின்வாரியத் துறைக்கு தகவல் தெரிவித்து சரிசெய்ய வேண்டும்.
3. பள்ளி வளாகத்தில் புதர்கள், மரக்கிளைகள் அகற்றப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. மழைக்காரணமாக மாணவர்களுக்கு நோட்டுபுத்தகம் மற்றும் பாட புத்தகம் சேதம் ஏற்பட்டிருப்பின் அவ்விவரத்தினை உடனடியாக தெரிவித்து மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் பெற்று வழங்கிட ஏற்பாடு செய்தல் வேண்டும். மேலும் மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ் சேதமடைந்திருப்பின் அம்மாணவர்களுக்கு உடனடியாக வழங்கிட ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
5. மழை வெள்ளத்தினால் பள்ளிக்கு வரும் மாணவர்கள் போக்குவரத்து துண்டிப்பு ஏற்பட்டு பள்ளி வர இயலாத மாணவர்கள் விவரங்களை வகுப்புவாரியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.
6. ஏரி,குளம், ஆறு போன்ற நீர்நிலை பகுதிகளுக்கு மாணவர்கள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை வழங்க அறிவுறுத்தப்படுகிறது.
7. பள்ளிகளில் மாணவர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவறை தூய்மையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
8. PARAKH NAS அடைவுத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் செவ்வனே நடத்திட அறிவுறுத்தப்படுகிறது.
9. பாதுகாப்பற்ற கட்டிடங்கள் மற்றும் கழிவறைகள் பகுதிகளுக்கு மாணவர்கள் செல்லாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
10. அந்தந்த பள்ளிகளில் நோட்டுபுத்தகம் மற்றும் பாடபுத்தகங்கள் இருப்பில் உள்ள விவரத்தினை மாவட்டக்கல்வி அலுவலருக்கு தெரிவிக்கமாறு அறிவுறுத்தப்படுகிறது.
11. பள்ளி மைதானத்தில் நீர்தேங்கி இருப்பின் உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

நகல்,
மாவட்ட கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக்கல்வி/ தொடக்கக் கல்வி)
மாவட்டக்கல்வி அலுவலகம்,
வேலூர்.